[1982 ஏப்ரல் 1

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் சங்கத்திடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனு.

*வினா எண். 706— திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் சங்கத்திடம் இருந்து 22–2–1981 தேதியிட்ட கோரிக்கை மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன !

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஒன்பது கோரிக்கைகள் அடங்கிய 27–2–1981 தேதியிட்ட மனு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் தலைமை சங்கத்திடமிருந்து வரப்பெற்று அவைகளில் 3 கோரிக்கைகள் மீது இறுதியான உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. மற்றவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அவர்களுடைய முக்கியமான கோரிக்கை, டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் செக்ஷன், பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸ் ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் இருக்கிற மேல்நிலை அலுவலர்களும் ஆசிரியர்களும் சர்க்கார் ஊழியர்களாக மாற்றப்பட்டு இருப்பதாகவும் இந்த அடித்தட்டில் இருக்கிற ஊழியர்கள் இன்னும் மாற்றப்படவில்லை என்றும் அதனால் 'டபிள் டைப் ஆஃப் சர்வீஸ்' வருகிறது என்றும் அவர்களுக்கு பிரமோஷன் அவன்யூஸ் இல்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்யுமா? மூன்று கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். அவை என்னென்ன கோரிக்கைகள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றக்கூடிய பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக மாற்ற வேண்டுமென்றால் அது ஒரு கொள்கைப் பற்றிய முடிவாகும். ஆகவே, அதை அரசாங்கம்தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, இப்போது இருக்கிற துறை முடிவு செய்ய முடியாது. ஆகவே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மற்றுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று கோரிக்கைகளில் ஒன்று—அடிப்படை பணியிலே இருக்கிற முழுநேர ஊழி

யர்களின்பணி வரன்முறை செய்யப்பட்டு அவர்களுக்குப் பேசிக்பே 200 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்பது. அடுத்த கோரிக்கை ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் மகப்பேறு ஆயாக்களுக்குப் பயணப்படிவழங்குவது பற்றி. இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் தகுதியுள்ள ஊழியர்களின் நிர்ணயம் செய்த பயணப்படி அடுத்த ரூபாய் 5-க்கு முழுமையாக்கப்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. அடுத்த கோரிக்கை ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் மகப்பேறு ஆயாக்களுக்கு சலவைப்படி (வாஷிங் அலவன்ஸ்) கொடுப்பது. 20—2—1981 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 265-ல் சலவைப்படி அடிப்படை ஊழியர்களுக்கு மாதம் 5 ரூபாய் ஆகவும், ஜீப் ஓட்டுநர்களுக்கு ரூபாய் 10 ஆகவும் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மகப்பேறு ஆயாக்களுக்கு சலவைப்படி வழங்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மகப்பேறு மனையில் இரண்டு ஆயாக்கள் செயல்படுவதிலே ஒரு ஆயாவுக்குத்தான் அந்த அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. இரண்டாவது ஆயாவும் அவர்கள் கூட போக வேண்டும். அந்த அம்மாவுக்கு என்ன டார்கெட் இருக்கிறதோ அதே டார்கெட் இந்த அம்மாவுக்கும் இருக்கிறது. ஆனால் எஃப்.டி.ஏ. கொடுக்கப்படவில்லை. அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா? பரிசீலனையில் இருக்கிறது என்றால் எவ்வளவு சீக்கிரமாக பரிசீலனையை முடித்து, அவர்களுக்குக் கொடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே எஃப்.டி.ஏ பற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை.. ஆனாலும் கூட அதுவும் பரிசீலிக்கப்படும். ஒரு ஆயாவுக்கு இப்பா பணம் கொடுக்கப்பட்டு, இன்னொரு ஆயாவுக்கு கொடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு இரா. கருப்பையா: தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய அடிப்படை பணியாளர்கள் இரவு பகல் 24 மணி நேரமும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே இருந்து பணிபுரிய வேண்டிய ஊழியர்கள். அவர்களுடைய பணிநிலையை கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு மற்ற விஸ்தரிப்பு அதிகாரிகள், ஒன்றிய ஆணையாளர்களுக்கு வீடுகள் கொடுக்கட்பட்டிருப்பதைப் போல இவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒன்பது அம்ச கோரிக்கையில் அதுவும் ஒன்று. ஆகவே, அதுவும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களைப் போலவே ஊராட்சி மன்றங்களிலும், பேரூராட்சிகளிலும் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் பலயிடங்களில் 100 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி குறைந்தபட்சம் 200 ரூபாயாவது கிடைக்கச் செய்கின்ற நிலைமையும் இந்தத் திட்டத்தோடு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களெல்லாம் பார்ட் டைம் ஒர்க்கர்களாக இருப்பவர்கள். பகுதி நேர ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னால்தான் அப்படிப்பட்ட நிலையை உருவாக்க முடியும். ஆகவே, அதைப்பற்றி அரசினுடைய பரிசீலனையிலே தற்போது இல்லை.

தார் போடுவதற்குப் பதிலாக வேறு பொருள் போட நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்ட ஆராய்ச்சி

*வினா எண். 707—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெடுஞ்சாலைத்துறை ஆய்வு நிலையம் தார் போடுவதற்கு பதில் வேறு பொருள் போட ஆராய்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) பழுப்பு நிலக்கரி தாரிலிருந்து சாலை பிணைப் பொருள் தயாரிப்பதற்கான சோதனைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பினை பொருள் தயாரிக்கும் முன்னோடி இயந்திரம் நிறுவப்பட்டு வெள்ளோட்டம் விட உள்ளது.